

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் டி.ராஜேஷ் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் கராத்தே போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மு.பகலவன், பி.ஜெ.மூர்த்தி, ஆ.சக்திவேல், நா.செல்வசேகரன், பி.முத்து, கே.வி.லோகேஷ், ஆர்.வி.தினகரன், அருமந்தைசெல்வம், கே.லோகநாதன், டி.சங்கர், டாக்டர்.என்.வில்சன்நிலவழகன் கோல்டுடி.மணி, ஏ.சீனிவாசன், அப்புன், பி.ஜி.பார்த்தீபன், முகமதுமொய்தீன், ஜெ.வேலு, எ.காமாட்சி, டி.நளாயினி, சுந்தரிஅன்பு, சரண்யா, நிர்மலா மற்றும் பலர் பங்கேற்றனர்.

### இளையான்குடி ஒன்றியம்

## வடக்கு அண்டக்குடியில் பல்நோக்கு வணிக வளாகம்!

### திருமதி தமிழரசி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்

சிவகங்கை. ஜுலை 18.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் வடக்கு அண்டக்குடியில் ஊராட்சியின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு வணிக வளாகத்தினை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ. திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், இளையான்குடி ஒன்றிய குழு தலைவர் முனியாண்டி, கிழக்கு ஒன்றிய செயலாளர். வே.தமிழ் மாறன், கூட்டுறவு சங்கத் தலைவர் சுப. தமிழரசன், விவசாய அணி பா.காளிமுத்து, மானாமதுரை தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் சுப. அன்பரசன், கண்ணன் தொண்டரணி துணை அமைப்பாளர் புலிக்குட்டி,

நிர்வாகிகள் சாரதி, ராஜபாண்டி, வே.கருணாகரன் சிவனேசன், ராஜேந்திரன், ஒன்றிய குழு உறுப்பினர் சண்முகம், கிளைச் செயலாளர்கள் சந்தனம்,கோவிந்தராசு, நீலமேகம் உட்பட கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயகுமார் வரவேற்றுப் பேசினார்

வட்டார வளர்ச்சி அலுவலர்முத்துகுமார் நன்றி கூறினார்.



சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதை முன்னிட்டு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, தலைமையில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் வட்டச் செயலாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### வடசென்னை – திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில்

## கலாநிதி வீராசாமி எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு

சென்னை, ஜுலை 18 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் முன்னிலை வகிக்கிறார். திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் ,1 வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் மார்க்யூஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPIM) ஜெயராமன், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஜான் அலெக்சாண்டர், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், மக்கள் நீதி மய்யம், இந்தியன் முஸ்லிம் லீக், மனித நேய மக்கள் கட்சி, மனித தேசிய ஜனநாயக கட்சி, ம.திமு.க, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, சமத்துவ மக்கள் கழகம் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆகியோர் நேற்று 17.7. 2024 காலை 8 மணியளவில் , நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இரண்டாவது முறையாக தேர்தலில் வெற்றி பெற்று வடசென்னை வாழ் மக்களுக்கு மக்கள் பணியாற்ற உள்ளார் , அவரைத் தேர்ந்தெடுத்த வடசென்னை வாழ் மக்களுக்கு தொகுதி வாரியாக நன்றி தெரிவித்து வருகிறார் , அதன்படி இன்று திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியான திருவொற்றியூர் கிழக்கு பகுதியில் வார்டு 7 முதல் வார்டு 14 (அ) வார்டு வரை தன் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

இதில் சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி நிர்வாகிகள், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர் டி.ஏ.ராஜ், சாந்தி பக்தன், பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி, பகுதி துணை செயலாளர் எம். வீ.குமார், கே.பிரபாவதி, பொருளாளர் இரா.குமரேசன், வட்ட கழக செயலாளர்கள் த.கார்த்திகேயன், டி. சி.வி.மணிகண்டன், எம்.எல். சரவணன், எஸ்.தமிழ் செல்வன், குருத்து சி.முனுசாமி, கவீ.சதிஷ் குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஏகா.கார்த்திகேயன், ஆர்.சந்தர் , மாமன்ற உறுப்பினர்கள் டி.சி.வி.ராஜகுமாரி, எஸ்.உமா சரவணன், கே.சரண்யா கலை வாணன், வீ.கவி.கணேசன், சுசிலா ராஜா, பானுமதி சந்தர், மாவட்ட பிரதிநிதிகள்: எஸ். பாஸ்கர், ஒய். நந்திவர்மன், ஆர்.ரஜினி பாபு, டி.டி.எம். பாபு, ஆர்.டில்லி, அ.அப்துல் சலீம், ம.ஜெயராமன், வி.பழனிவேல், ம.எத்திராஜ், கே. காரத்திகேயன், பி.எஸ். சைலஸ், ப.சந்தான கிருஷ்ணன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டியில்

## மக்களுடன் முதல்வர் திட்டம்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜுலை 18-.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள 'மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம் ஊரகப் பகுதிகளிலும் கடந்த 11ஆம் தேதிதர்மபுரியில் முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடங்கப்பட்டது.நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார்.ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் தரணி வேந்தன்,கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி ஸ்ருதன் ஜெய் நாராயணன்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சமூக பாதுகாப்பு திட்டத்தின் துணை ஆட்சியர் முகுந்தன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

பொதுமக்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகள் மற்றும் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என்ற வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் துவங்கி வைத்தார்.

இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தருமபுரியில் தொடங்கி வைத்தார்.

இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்து முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிவுறுத்தினார்.

முகாமில் வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன், வேளாண்மை உதவி இயக்குனர் விஜய சந்தர், ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் ஜெயபாலன், ஒன்றிய செயலாளர்கள் மேல்மலையனூர் கிழக்கு நெடுஞ்செழியன், செஞ்சி மதியம் விஜயராகவன், மேற்கு பச்சையப்பன், மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன் பொதுக்குழு உறுப்பினர் மணி வண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீதாலட்சுமி, மலர்.ஒன்றிய கவுன்சிலர்கள் கேமல், டிலைட், புவனா செந்தில் குமார், கமலம்மாள், ஊராட்சி மன்ற தலைவர்கள் முத்தம்மாள் சேகர் ராஜேந்திரன்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.செஞ்சி வட்டாட்சியர் ஏழுமலை நன்றி கூறினார்.

### மயிலை சட்டமன்றத் தொகுதியில் – இன்று

## பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள்!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்கிறார்!

சென்னை, ஜுலை 18-

மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் இன்று (18.07.2024) காலை 08.30 மணி அளவில் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. 121 வார்டில் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் இருபத்தைந்து லட்சம் செலவில் ஐயன் வள்ளுவன் திருவுருவச் சிலையை சீரமைப்பு செய்து, உயர் கோபுர கடிகாரம், 124 வது வார்டில் ஸ்லேட்டர் புரம் பிரதான சாலை ரூபாய் 36 லட்சத்தில் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் மற்றும் ரூபாய் 35 லட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி கூடம்,

மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதியில் பயணிகள் நிழற்குடை, மாமன்ற உறுப்பினர் திருமதி அ. ரேவதி 125 வது வார்டு மேம்பாட்டு நிதியில் இருந்து ஆர் கே சாலை கைலாசபுரம், பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற் குடை,

123 வது மாமன்ற உறுப்பினர் திருமதி சரஸ்வதியின் மேம்பாட்டு நிதியில் இருந்து பயணிகள் நிழற்குடை, 171 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி கீதா முரளி வார்டு மேம்பாட்டு நிதியில் இருந்து மேயர் ராமநாத செட்டியார் திருமண மண்டபம் அருகில் பயணிகள் நிழற் குடை உள்ளிட்டவைகளை சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மயிலை த.வேலு எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்.

மாவட்ட, பகுதி, வட்டக்கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி கேட்டு கொள்கிறார்.

### நீர்பிடிப்பு பகுதியில்தொடர்ந்து மழை:

## பவானிசாகர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 4 அடி உயர்ந்தது

சத்தியமங்கலம், ஜுலை.17

பவானிசாகர் அணை 105 அடி உயரமும் 32.8 டிஎம்சி கொள்ளளவும் கொண்டதாகும். இந்த அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 47 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மலைப்பகுதி மற்றும் வட கேரளாவில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகிறது. இதன்காரணமாக பவானிசாகர் அணைக்கு வந்து சேரும் பவானி ஆறு மற்றும் மாயாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

நேற்று காலை அணைக்கு நீர்வரத்து 6,872 கனஅடியாக இருந்தது.

நேற்று 20,092 கன அடியாக அதிகரித்து உள்ளது. அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 4 அடி உயர்ந்துள்ளது.

நேற்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணை நீர்மட்டம் 74.48 அடியாகவும், நீர் இருப்பு 12.9 டிஎம்சி ஆகவும் உள்ளது.

அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக பவானி ஆறு மற்றும் கீழ்பவானி வாய்க்காலில் 1105 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. தொடர்ந்து பவானிசாகர் அணை நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் பாசன பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### தினேஷ் மாணிக்கம் தலைமையில்

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - நல உதவிகள்!

### மயிலை த.வேலு வழங்குகிறார்!

சென்னை, ஜுலை 18 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம் தலைமையில் நல உதவிகள் வழங்கும் விழா இன்று (18-07-2024) மாலை 5:30 மணியளவில்) அன்பகத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி. , கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி , மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி., வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜா சுரேஷ் அ.நாகராஜன் ஆகியோர் முன்னிலையில் , மாவட்ட துணை அமைப்பாளர்கள் த.விக்னேஷ்வரன், எஸ்.உமா சங்கர் , Dandy பிரகாஷ், எ.அஸ்வின் குமார் வரவேற்பில் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, எம். எல்.ஏ. மாநில இளைஞரணி துணை செயலாளர் எஸ். ஜோயல் நல திட்ட உதவிகளை வழங்குகின்றனர்

இதில் மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஜி. ஆர். ராஜேந்திரன், துணை செயலாளர்கள் ஆர். எல்.வி.அசோக், பா.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன் ,ஜி.முருகையன், வட்ட செயலாளர்கள் டி. ராஜவேலு, சீ. கிருஷ்ணமூர்த்தி, மு.இ.ஏழுமலை, மூ.ராஜேந்திரன்.. பகுதி துணை அமைப்பாளர்கள் ஆ.சிங்காரவேல், சி.வி. திவாண் குமார், ஜெ.சக்திவேல் தா. தாமு நீ.ஜெய் குமார் எஸ். பாலாஜி, வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறனர்

நன்றியுரை 122வது வட்ட அமைப்பாளர் கு.லோகேஷ் கூறுகிறார்.

### கொளத்தூர் அஞ்சுகம் நகரில் சிறகுகள் மகளிர் நல முன்னேற்றச் சங்கம் சார்பில்

## கலைஞர் பாடல்கள் 12 மணி நேரம் பாடி உலக சாதனை!

சென்னை, ஜுலை 18 -

சென்னை கொளத்தூர் அஞ்சுகம் நகரில் உள்ள தனியார் மகாலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு சிறகுகள் மகளிர் நல முன்னேற்ற சங்கம் மற்றும் சாரா ரிதம்ஸ் சார்பாக கலைஞரின் கைவண்ணத்தில் உருவான திரைப் படப் பாடல்களை இடைவிடாது 12 மணி நேரம் தொடர்ந்து 101 பாடல்களை 25 பாடகர்கள் குழுவாக இணைந்து பாடி உலக சாதனை படைத்துள்ளனர்.

இந்நிகழ்ச்சி சிறகுகள் மகளிர் நல முன்னேற்ற சங்க இயக்குனர் திருமதி சாரதா தலைமையிலும் மற்றும் சிறகுகள் மகளிர் சங்கம் செயலாளர் பி. தேவி துணை செயலாளர் ஷ்யாமா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

நிறைவாக யுனிவர்சல் அச்சிவர்ஸ் புக் ஆப் ரெகார்ட்ஸ் மற்றும் ஃபியூச்சர் கலாம் புக் ஆப் ரெகார்ட்ஸ் நிறுவனத்தினர் சிறகுகள் மகளிர் நல முன்னேற்ற சங்கம் இயக்குனர் மூ.சாரதாவுக்கு உலக சாதனை சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சின்னத்திரை நடிகர் அசோக் பங்கேற்றார்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, மண்டலம் 5, வார்டு எண்.61, புதிய பூபதி நகரில் சிதிலமடைந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகாலை இடித்து அகற்றிவிட்டு, சென்னை மாநகராட்சியின் சார்பில் 93 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் கட்டும் பணியினைத் தொடங்கி வைத்தார்.

## காவிரியில் நீர் திறப்பு அதிகரிப்பு!



சென்னை,ஜுலை.17-

காவிரி ஆற்றில் திறக்கப்படும் நீரின் அளவை 45,651 கன அடியாக கர்நாடக அரசு அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் கேரள மாநிலம் வயநாட்டிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. தென்மேற்கு பருவ மழை காரணமாக, கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

கபினி அணை நிரம்பியதால் அணையின் பாதுகாப்பு கருதி 3 நாள்களாக உபரி நீர் காவிரியில் வெளியேற்றப்பட்டு வருகிறது. கபினி அணையின் உபரி நீர் வரத்து காரணமாக மேட்டூர் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், கபினி அணையில் இருந்து 40,000 கன அடி நீர் திறக்கப்பட்டு இருந்த நிலையில், 45,000 கன அடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது. கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து நீர் திறப்பு வினாடிக்கு 651 கன அடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

நீர் திறப்பு அதிகரிக்கப் பட்டுள்ளதால், காவிரி ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடப் பட்டுள்ளது.

### நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும்

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் கட்டுமானப் பணிகள்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் ஆய்வு!

நாகர்கோவில், ஜுலை 18-

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட, 3 வது வார்டு கிறிஸ்டோபர் நகர் விரிவாக்கம் (சாஸ்தான் கோவில் ரோடு), தென்றல் நகர் ஆகிய பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் கட்டுமானப் பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், அப்பகுதியில் சிறிய பாலம் அமைக்க வேண்டிய இடத்தையும் மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து, 4வது வார்டு பெருவிளை பழைய ஊராட்சி மன்றம் அருகில் படிப்பகம் கட்டுவதற்கான இடத்தை தேர்வு செய்வது தொடர்பாக பார்வையிட்டு ஆய்வு செய்தார். ராஜலெட்சுமி நகரில் அமைந்துள்ள பூங்கா மற்றும் நூலகத்தை ஆய்வு செய்து அங்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, இளநிலை பொறியாளர் தேவி, சுகாதார அலுவலர் ராஜா, மாமன்ற உறுப்பினர் அ. அருள் சபிதா ரெக்ஸலின், மாநகராட்சி அதிகாரிகள், பகுதி செயலாளர் சேக்மீரான் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.





குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 489 பயனாளிகளுக்கு ஆணை வழங்கும் விழாவில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர் டி. எம்.கதிர் ஆனந்த் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஒன்றியக்குழு தலைவர்கள் சத்தியானந்தம், இரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் கள்ளூர் ரவி, அன்பரசு, பிரதீஷ், சீதாராமன், முருகேசன், ஊரக உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள், அரசுத்துறை அதிகாரிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.